# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 100 | புதன்கிழமை Wednesday | 08.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode


# ஹிட்டாச்சி ரூ.1,000 கோடி முதலீடு: முதலமைச்சர் விஜய் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து



சென்னை: ரூ.1,000 கோடி முதலீட்டில் 1,000 நபர்களுக்கு உயர்தர தொழில்நுட்ப வேலை- வாய்ப்பு வகையில் அளிக்கும் போரூரில் உள்ள எனர்ஜி ஹிட்டாச்சி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம் மற்றும் செங்கல்பட்டில் உள்ள ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா நிறுவனத்தின் உற்பத்தி விரிவாக்கத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர்விஜய்முன்னிலையில் கையெழுத்தானது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பு: தமிழக முதல்வர் விஜய் முன்னிலையில் இன்று (ஜூலை 7) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், 3 முதல் 5 ஆண்டுகளில் 1,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் கூடுதலாக 1,000 நபர்களுக்கு உயர்தர தொழில்நுட்ப வேலைவாய்ப்புகள் அளித்திடும் வகையில், சென்னை போரூரில் உள்ள ஹிட்டாச்சி குழுமத்தைச் சேர்ந்த உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தின் விரிவாக்கத் திட்டத்திற்கும், செங்கல்பட்டில் உள்ள ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியாநிறுவனத்தின் உற்பத்தித் திட்டத்தின் விரிவாக்கத்திற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் மற்றும் ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், ஹிட்டாச்சி குழுமம், உலகளாவிய ஃபார்ச்சூன் 500 (Global Fortune) நிறுவனங்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் மற்றும் ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் இக்குழுமத்தின் துணை நிறுவனங்கள் ஆகும்.

முதல்வர் முன்னிலையில், 3 முதல் 5 ஆண்டுகளில், 1000 கோடி ரூபாய் முதலீட்டில், சென்னை போரூரில் உள்ள ஹிட்டாச்சி குழுமத்தைச் சேர்ந்த உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தின் விரிவாக்கத் திட்டத்திற்கும்,செங்கல்பட்டில்உள்ளஹிட்டாச்சி எனர்ஜி இந்தியாநிறுவனத்தின் உற்பத்தித் திட்டத்தின் விரிவாக்கத்திற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 1,000 உயர்தர தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில்,தொழில் துறை அமைச்சர் எஸ். கீர்த்தனா, தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.விஜயகுமார், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தீபக் ஜேக்கப், ஹிட்டாச்சி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வேணு நுகரி,ஹிட்டாச்சி இந்தியா நிறுவனத்தின் தலைமைவளர்ச்சிஅலுவலர் கார்த்திக் கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வயநாடு நிலச்சரிவு: 3 பேர் உயிரிழப்பு; சிக்கிய பலரை மீட்கும் பணி தீவிரம்



வயநாடு:

கேரள மாநிலம் வயநாட்டில் சுரங்கப்பாதை சாலை கட்டுமானப் பணி நடைபெறும் இடத்துக்கு அருகே ஏற்பட்ட பெரும் நிலச்சரிவில் சிக்கி இதுவரை இருவர் உயிரிழந்தது உறுதியானது.

காயங்களுடன் 7 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். மேலும், நிலச்சரிவில்சிக்கிமாயமானோரை மீட்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

கோழிக்கோடு மற்றும் வயநாட்டை இணைக்கும் வகையில் கட்டப்பட்டு வரும் வயநாடு சுரங்கப்பாதை சாலை திட்டத்தின் (அனக்கம் பொயில் - கல்லாடி - மேப்பாடி) நுழைவாயில் அருகே, இன்று (ஜூலை 7) பெய்த கனமழையால் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது.

கல்லாடியில் உள்ள மீனாட்சி பாலத்துக்கு அருகே இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. நிலச்சரிவு நடந்ததுமே அப்பகுதியில் இருந்து ஒருவர் சடலமாகவும்,7 பேர் உயிருடனும் மீட்கப்பட்டனர். இந்நிலையில், மேலும் ஒருவர் உயிரிழந்ததால் பலி இப்போது 2 ஆக அதிகரித்துள்ளது.

நிலச்சரிவு நடந்த சுரங்கப்பாதை திட்டப் பணியாளர்கள் தங்கியிருந்த தற்காலிகக் குடியிருப்புகளுக்கு அருகே இந்த மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்னதாக இந்த நிலச்சரிவு குறித்து தகவல் வெளியிட்ட கேரள முதல்வர் வி.டி.சதீசன், "மீட்புப் பணிகளைத் தாமதமின்றி ஒருங்கிணைக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வருவாய்த் துறை அமைச்சர் ஏ.பி.அனில் குமார் மற்றும் வேளாண் துறை அமைச்சர் டி.சித்திக் ஆகியோரை உடனடியாக வயநாட்டிற்குச் செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளேன். மாவட்ட ஆட்சியருடனும் நான் தொலைபேசியில் பேசினேன்" என்று கூறியிருந்தார்.

இதற்கிடையில் வயநாடு,கோழிக்கோடு பகுதிகளுக்கு இன்று அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

'மனிதத் தவறால் ஏற்பட்ட நிலச்சரிவு

இந்தச் சம்பவம் குறித்து பேசிய அமைச்சர் டி. சித்திக், "இது இயற்கையாக நிகழ்ந்த நிலச்சரிவு அல்ல; மனிதத் தவறால் ஏற்பட்ட நிலச்சரிவு. இது நிர்வாக அலட்சியத்தால் நிகழ்ந்த ஒரு தெளிவான சம்பவம். கல்லாடியில் நிலச்சரிவு நடந்த இடத்தில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம். அப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது என்பது குறித்து மாவட்ட ஆட்சியர் கொங்கன் ரயில்வேக்கு எழுத்துபூர்வமாகத் தெரிவித்திருந்தார்.

வயநாடு மற்றும் கோழிக்கோட்டைச் சேர்ந்த மொத்தம் 60 பேர் கொண்ட இரண்டு தேசிய பேரிடர் மீட்புப் படை குழுக்கள் சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சியர் சம்பவ இடத்தில் நேரில் உள்ளார்.நானும் மாநில அமைச்சர் ஏ.பி. அனில் குமாரும் சம்பவ இடத்துக்குச் சென்று கொண்டிருக்கிறோம். இது குறித்துத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கொங்கன் ரயில்வேக்கு முன்னரே அறிவுறுத்தப்பட்டிருந்தது, ஆனால் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதுபோன்ற விஷயங்களைச் சகித்துக்கொள்ள முடியாது; ஏனெனில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு முண்டக்கையில் ஏற்பட்ட நிலச்சரிவில் 298 பேர் உயிரிழந்தனர்" என்று கேரள அமைச்சர் டி.சித்திக் கூறினார்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959


# தவெக கூட்டணியில் இருக்கிறதா விசிக? திருமாவளவன் விளக்கம்

சென்னை: "அமைச்சர்கள், அதிகாரிகள் எங்கு சென்றாலும்ரீல்ஸ்போடுவது உலகம் முழுவதும் வாடிக்கை ஆகியுள்ளது. அமைச்சரவையில்சேர்ந்துவி ட்டோம் என்றவுடனேயே நாங்கள் இன்னொரு (தவெக) கூட்டணியில் சேர்ந்துவிட்டோம் என்று பொருளில்லை," என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "அமைச்சரவையில் சேர்ந்ததாலேயே இன்னொரு கூட்டணியில் (தவெக) இடம்பெற்று விட்டோம் என்று பொருளல்ல. ஆட்சி அமைக்க 2 இடங்கள் பற்றாக்குறையாக உள்ளது. இதனால் விசிக ஆதரவு தர வேண்டும் என முதல்வர் விஜயிடமிருந்து வெளிப்படையாக கடிதம் வந்தது. காங்கிரஸ்,இடதுசாரி கட்சிகள் ஆதரவு கொடுத்தன. அப்படித்தான் விசிக-வும் வெளியில் இருந்து ஆதரவு கொடுப்பதாக தெரிவித்தோம். பத்து நாட்கள் கழித்துதான் அமைச்சரவையில் இடம்பெறுவது என்ற முடிவை நாங்கள் எடுத்தோம். அதன் பிறகு செய்தியாளர்களை சந்தித்தபோது, 'இன்னும் திமுக கூட்டணியில் இருக்கிறீர்களா' என கேட்டனர். அதற்கு நான், 'ஆம், திமுக கூட்டணியில் தொடர்கிறோம்' என்று தான் கூறினேன். ஜூலை 1-ஆம் தேதி கூட்டணி தொடர்பாக, ஆதரவு நல்கிய கட்சிகளுடன் முதல்வர்விஜய்பேச்சுவார்த்தை நடத்தினார். இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. ஆகவே,தவெகதலைமையில் ஒரு கூட்டணி அமையவில்லை என்றுதான் பொருள். விசிக அமைச்சரவையில் இடம்பெற்ற உடனேயே திமுகவுக்கு நாங்கள் துரோகம் செய்துவிட்டோம் எனப் பலரும் விமர்சனங்களை முன்வைத்தனர்.

இதற்கு விடை சொல்லக் கூடிய வகையில் தான், நான் பதில் சொன்னேன். பதவி என்றவுடன் ஒரு கூட்டணியை உதறிவிட்டு ஓடிவிடவில்லை; எடுக்கின்ற முடிவுகள் ஒவ்வொன்றையும் கூட்டணி தலைமையிடம் கருத்துகளை பகிர்ந்து கொண்டோம்; ஸ்டாலினை சந்தித்தும் பேசியிருக்கிறோம். அதைத்தான் நான் சொன்னேன்; திமுகவுடனான உறவு தொடர்கிறது; நட்பு தொடர்கிறது" என்றார்.


## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஈரோடு வேலப்ப கவுண்டர் வலசு, சாமியப்பன் தோட்டத்தில் கழிவுநீர் வடிகால் வசதி அமைக்கக்கோரி சட்டமன்ற உறுப்பினரிடம் பொதுமக்கள் மனு



ஈரோடு மாநகராட்சி பத்தாவது வார்டு வில்லரசம்பட்டி அஞ்சலுக்குட்பட்ட வேலாப்பகவுண்டர் வலசு சாமிய ப்பன் தோட்டம் (லேஅவுட்) வீட்டு உரிமையாளர்கள் சங்கம் சார்பில், அப்பகுதி மக்களின் முக்கியப் பிரச்சினை குறித்து மேற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கே.கே. ஆனந்த மோகன் அவர்களிடம் ஈரோடு மாநகராட்சி பத்தாவது வார்டுமாமன்றஉறுப்பினர் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் மாமன்ற உறுப்பினர் குமரவேல் தலைமையில் கோரிக்கை மனு ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில், ஈரோடு கைகாட்டி வலசு சாமியப்பன் தோட்டம் பகுதியில் 50-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பகுதியில்முறையான கழிவுநீர் மற்றும் மழைநீர் வெளியேறும் வடிகால் வசதிகள் இல்லாத காரணத்தால், வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் ஆங்காங்கே தெருக்களில் தேங்கி நிற்கிறது.

இதனால் கடுமையான கொசுத் தொல்லை ஏற்பட்டுள்ளதோடு, மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் போன்ற உயிருக்கு ஆபத்தான நோய்கள் பரவும் அபாயமும் உருவாகியுள்ளது. எனவே, பொதுமக்களின் சுகாதார நலனைக் கருத்தில் கொண்டு, தெருவின் இரு பகுதிகளிலும் முறையான கழிவுநீர் மற்றும் மழைநீர் வடிகால் அமைப்பை விரைந்து ஏற்படுத்தித் தர வேண்டும் என சாமியப்பன்தோட்டம்வீட்டு உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தாமரைக்கண்ணன், செயலாளர் ரவிச்சந்திரன் மற்றும் பொருளாளர் துரைசிங் ஆகியோர் சட்டமன்ற உறுப்பினரிடம் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் சுமார் 40க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்ட கடிதத்தை வழங்கினர்.

# நந்தா பொறியியல் கல்லூரிக்கு உயர்தர "ஏ" சான்றிதழ் அந்தஸ்து



ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியில் மத்திய அரசு கல்வி அமைச்சத்தின் வழிக்காட்டுதல்படி ஈரோடு பிராந்தியத்திற்கான "சுவயம்-என்.பி.டி.ஈ.எல்" ஆன்லைன் படிப்பிற்கான மையம் செயல்பட்டு வருகிறது.

இம்மையத்தின் மூலம் கடந்த ஆண்டின் ஜீலை முதல் டிசம்பர் மாத காலங்களில் 1800 க்கும் மேற்பட்ட மாணவர்களும், பேராசிரியர்களும் ஐஐடி - கள் மூலம் நடத்தப்படும் வெவ்வேறான பாடங்களை தேர்வு செய்து படிப்பினை மேற்கொண்டார்கள். இறுதியில் நடத்தப்பட்ட பருவத் தேர்வில் "கிரேடுகள்" முறையில் மாணவர்களும், பேராசிரியர்களும் அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றிப் பெற்றுசாதனைப்படைத்தார்கள். இவர்களின் சாதனைக்கு சிறந்தொரு கற்றல் சூழலினை ஏற்படுத்திக் கொடுத்து திறம்பட செயல்பட்ட "ஈரோடு பிராந்தியத்திற்கான "சுவயம்-என்.பி.டி.ஈ.எல்" ஆன்லைன் படிப்பிற்கான மையம்" என்கிற முறையில் சென்னை --19 வளாகத்தில் மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் நந்தா பொறியியல் கல்லூரிக்கு "ஏ" தரச்சான்றிதழினை வழங்கி அங்கீகாரம் செய்து சிறப்பித்தது.

இத்தகைய "ஏ" தரச்சான்றிதழினை பெறுவதற்கு உறுதுணையாக செயல்புரிந்த கல்லூரின் முதல்வர் முனைவர் யு. எஸ். ரகுபதி மற்றும் மையத்தின் ஒருங்கிணைப்பாளரும், புலமுதல்வருமான முனைவர் ஈ.கே.மோகன்ராஜ் ஆகியோருக்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி.சண்முகன் தனது பாராட்டினை தெரிவித்தார். சென்னை ஐ.ஐ.டி நிறுவனமானது கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சியான முறையில் "ஏ" தரச்சான்றிதழினை வழங்கி அங்கீகாரம் செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் "ஏ" தரச்சான்றிதழினை பெற உதவி புரிந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், செயலர் எஸ். நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ். திருமூர்த்தி மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே.வேலுசாமி ஆகியோர் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து ஊக்கப்படுத்தினார்கள்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்களுக்கான குறைதீர்க்கும் கூட்டத்தில் சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப்பெற்று குறைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கேட்டறிந்தார்.

# விபத்தில்லா ஈரோட்டை உருவாக்க வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கிய வடக்கு போக்குவரத்து போலீசார்



ஈரோடு மாநகரில் பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு மற்றும்போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், ஈரோடு வடக்கு போக்குவரத்து காவல்துறை சார்பில் சிறப்பான விழிப்புணர்வுபிரச்சாரம் நடைபெற்றது.

ஈரோட்டின் மிக முக்கிய மற்றும் பரபரப்பான சந்திப்புகளில் ஒன்றான ஸ்வஸ்திக் கார்னர் பகுதியில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு முகாமிற்கு, ஈரோடு வடக்கு போக்குவரத்து காவல்துறை ஆய்வாளர் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். அவருடன் உதவி ஆய்வாளர்கள் சண்முக மூர்த்தி, விக்டர், ராமலிங்கம்,சபரி கிரி மற்றும் தலைமை பெண் காவலர் சத்யா உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் பலரும் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். அப்போது அந்த வழியாகச் சென்ற இருசக்கரமற்றும்நான்கு சக்கரவாகனஓட்டிகளை நிறுத்தி, அவர்களுக்கு சாலைபாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை (Notice) வழங்கி, விதிகளைப் பின்பற்றுமாறு அன்போடு அறிவுறுத்தினர்.

"விபத்தில்லா ஈரோட்டை உருவாக்குவோம்" என்ற உன்னத நோக்கில் அச்சிடப்பட்டிருந்த அந்த துண்டுப் பிரசுரத்தில், மது அருந்திவிட்டு எக்காரணம் கொண்டும் வாகனம் ஓட்ட மாட்டேன், இருசக்கர வாகனம் ஓட்டும்போது கட்டாயம் ஹெல்மெட் (தலைக்கவசம்) அணிவேன், வாகனம் ஓட்டும் போது கைபேசியில் பேச மாட்டேன், இருசக்கர வாகனத்தில் இருவருக்கு மேல் பயணம் செய்ய மாட்டேன், உரிய வயதடையாத சிறுவர்களை வாகனம் ஓட்ட அனுமதிக்க மாட்டேன் மற்றும் ஓட்டுநர் உரிமம் (Driving License) உள்ளிட்ட முக்கிய வாகன ஆவணங்களை எப்போதும் உடன் வைத்திருப்பேன் போன்ற முக்கிய சாலை பாதுகாப்பு உறுதிமொழிகள் இடம்பெற்றிருந்தன. பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் காவல்துறை எடுத்த இந்த முயற்சி, வாகன ஓட்டிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.



ஈரோடு மாவட்டம், சாமிக்கவுண்டன்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாணவ, மாணவியர்களின் கற்றல்திறன் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (07.07.2026) ஆய்வு மேற்கொண்டார்.

## தென்காசி மாவட்டம் தமிழக கேரள எல்லைப்பகுதியில் அமைந்துள்ள

# புளியரை வட்டாரப் போக்குவரத்து சோதனை சாவடியில் லஞ்சம் வாங்கியது வீடியோ மூலம் அம்பலம்



தென்காசி மாவட்டம் புளியரை சோதனைச்சாவடியில் தினமும் இரண்டரைலட்ச ரூபாய் லஞ்சம்தரப்படுவதாக பல்வேறு ஆதாரங்களுடன் கேரள பத்திரிகைகள் அம்பலப்படுத்தி உள்ளன. தென்காசி மாவட்டம் புளியரை ஆர்டிஓ சோதனைச் சாவடியில் லாரி ஒன்றுக்கு ரூ.200 முதல் ரூ.400 வரை லஞ்சம் வசூலிக்கப்படுவதாகக் கூறப்படும் வீடியோ கேரளாவின் மாத்ருபூமி ஊடகத்தில் வெளியாகி பெரும் பரபரப்பைஏற்படுத்தியுள்ளது. அந்தச் செய்தியில், தினமும் தமிழகத்திலிருந்துகேரளாவுக்கு செல்லுஞ் ஆயிரத்திற்கும்மேற்பட்ட கனிமவள லாரிகளில் இருந்து ரூ.2.5 லட்சத்திற்கும் அதிகமாக வசூல் சட்டவிரோத நடைபெறுவதாககுற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கேரள ஊடகங்களில் முக்கியத்துவ த்துடன் வெளியாகியுள்ள நிலையில், முழுமையாக வெளிச்சத்துக்கு வர அனைத்து ஊடகங்களும் பொறுப்புடன் செயல்பட வேண்டும் தமிழக காவல்துறை மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறையினர் புளியரை சோதனைச் சாவடியில் உள்ள சிசிடிவி காட்சிகளை உடனடியாக ஆய்வு செய்து, குற்றச்சாட்டுகள் குறித்து முழுமையான விசாரணை நடத்தி,தவறுசெய்தவர்கள் யாராக இருந்தாலும் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல்துறைகண்காணிப்பாளர், போக்குவரத்துத் துறை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

## கோவை ஒத்தக்கால்மண்டபம் பகுதியில் உள்ள

# டி.ஜே. அகாடமி ஆஃப் டிசைன் கல்லூரியில் புதிய மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்ச்சி கல்லூரி அரங்கில் நடைபெற்றது

### மாணவர்களின் எதிர்காலத்தை நல்ல வழிகாட்டுதலுடன் துவங்க இக்கல்லூரியைத் தேர்வு செய்ததற்க்கு நன்றி தெரிவிக்கப்பட்டது



வடிவமைப்புக் கல்வியில் முன்னணி கல்வி நிறுவனங்களில் ஒன்றான டி.ஜே. அகாடமி ஆஃப் டிசைன் எனும் கல்லூரியின், 2026-ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்ச்சியை ஒத்தக்கால்மண்டபத்தில் அமைந்துள்ள கல்லூரி வளாகத்தில் நடத்தியது. வடிவமைப்புத் துறையில் தங்களது கல்விப் பயணத்தைத் தொடங்கும் புதிய மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், கல்வி நிறுவனத்தின் நிர்வாகம், பேராசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

படைப்பாற்றல் மிக்க சிந்தனையாளர்களையும், எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ப தங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் வடிவமைப்பாளர்களையும் உருவாக்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட டி.ஜே. அகாடமி ஆஃப் டிசைன், தகவல் தொடர்பு வடிவமைப்பு, தொழில்துறை வடிவமைப்பு,இன்டீரியர் வடிவமைப்பு, ஃபேஷன் வடிவமைப்பு ஆகிய துறைகளில் இளங்கலை படிப்புகளையும்,தகவல் தொடர்பு வடிவமைப்பு மற்றும் தொழில்துறை வடிவமைப்பு ஆகிய துறைகளில் முதுகலைப் படிப்புகளையும் வழங்கி வருகிறது.

தொழில்துறை சார்ந்த பாடத்திட்டம், அனுபவமிக்க ஆசிரியர்கள், செய்முறை அடிப்படையிலான கற்றல், பல்துறை கல்வி முறை, புதுமை, நிலைத்தன்மை மற்றும் வடிவமைப்புச் சிந்தனைக்கு அளிக்கும் முக்கியத்துவம் ஆகியவற்றால் இந்நிறுவனம் சிறப்பாக அறியப்படுகிறது. கல்லூரியின் முதல்வர் ஆர்.வைதியநாதன், மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் வரவேற்று பேசினார். மாணவர்கள் ஒரு பட்டப்படிப்பைப் பெறுவதற்காக மட்டுமல்லாமல், ஆர்வம், படைப்பாற்றல் மற்றும் நோக்கமிக்க வாழ்நாள் பயணத்தைத் தொடங்குவதற்காகவே டி.ஜே. அகாடமி ஆஃப் டிசைனைத் தேர்ந்தெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். இந்த நிகழ்ச்சியில், ஜி.கே.டி. அறக்கட்டளையின் தலைமை வழிகாட்டி சவுந்தரராஜன், ஜி.கே.டி. அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் முனைவர் லலிதா தேவி சஞ்சய் ஜெயவர்த்தனவேலுராஜா, டி.ஜே. அகாடமி ஆஃப் டிசைன் கல்வி த்துறை தலைவர் ராஜா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிட த்தக்கது.



ஈரோடு மாவட்டம், பேரோடு ஊராட்சியில் மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் கடனுதவி பெற்று சோலார் டிரையர் அமைத்து மதிப்பூட்டப்பட்ட செக்கு எண்ணெய் தயாரிப்பு பணிகள் செய்து வரும் முத்தாயம்மாள், நீலா லட்சுமி, அன்னை மகளிர் சுய உதவிக்குழுவினர்களின் தயாரிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (07.07.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், நசியனூர் பகுதியில் மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருத்துவ பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் மருத்துவ சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (07.07.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், நசியனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நியாயவிலைக்கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்குவதை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (07.07.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

## உலக இரத்தக் கொடையாளர் தினம்:

# வாலாஜா அரசு தலைமை மருத்துவமனையில் இரத்ததான முகாம் – 43 தன்னார்வலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பாராட்டு





ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந. பிரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.07.2026), மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் உலக இரத்தக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு, வாலாஜா அரசு தலைமை மருத்துவமனையில் நடைபெற்ற இரத்ததான முகாமை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, மனிதநேய சேவையில் ஈடுபட்டு தன்னார்வமாக இரத்ததானம் செய்த 43 இரத்தக் கொடையாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கி கௌரவித்தார். இணை இயக்குநர் (சுகாதார சேவைகள்) மரு. நிவேதிதா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.செந்தில்குமார், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. உஷா நந்தினி, இரத்த வங்கி மருத்துவ அலுவலர் மரு. சந்தியா வதனா, தொற்று நோயியல் நிபுணர் மரு. விஜயகுமார் உள்ளிட்ட மருத்துவர்கள், சுகாதாரத் துறை அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இரத்ததானம் என்பது உயிர்களைக் காக்கும் உயரிய மனிதநேயச் செயல் என்பதை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற இந்த முகாம், பொதுமக்களிடையே இரத்ததானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக்கிய நிகழ்வாக அமைந்தது.

# கோழியாளத்தில் தாத்தா இரட்டைமலை சீனிவாசன் 167ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

## விசிக சார்பில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள கோழியாளம் கிராமத்தில் தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் 167 வது பிறந்தநாள் விழா ஒன்றிய செயலாளர் தயாநிதி ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மாவட்ட செயலாளர் கீழ்.கா.அன்புச்செல்வன், மண்டல செயலாளர் சூ.க.ஆதவன், மேனாள் துணை பொதுச் செயலாளர் சூ.க.விடுதலைச்செழியன், உத்திரமேரூர் தொகுதி மாவட்ட செயலாளர் ஏழிலரசு, செய்யூர் தொகுதி மாவட்ட செயலாளர் புகழேந்தி, மகளிர் அணி மாநில செயலாளர் காஞ்சி தமிழினி, இளைஞர் அணி மாநில செயலாளர் ராஜ்குமார், மாவட்ட பொருளாளர் பேரறிவாளன், மாவட்ட செய்தி தொடர்பாளர் கலைக்கதிரவன், இளைஞர் அணி மாநில துணை செயலாளர் வெள்ளபுத்தூர் விஜயகுமார், தொகுதி துணை செயலாளர் வேலவன், மாவட்டத் துணைச் செயலாளர் எடிசன், ஆகியோர் கலந்து கொண்டு தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினர் இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் பன்னீர்செல்வம்,



கதிர்வாணன், முகிலன், கிட்டு பிரபாகரன், மலை சமத்துவன், ஊராட்சி மன்ற தலைவர்கள் அன்பழகன், ராஜேஷ், அச்சிறுப்பாக்கம் ஒன்றிய நிர்வாகிகள் செல்வம், முருகவேல், மதன், வெங்கடேசன், தலித்ராசன், ஏழுமலை, மகாதேவன், கன்னியப்பன், மணிகண்டன், அஜித் குமார், குமரேசன், தேசிங், கேது, முருகன், திலகவதி, கௌதம், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த தண்டலம் ஊராட்சி 1வது வார்டில் 15வது நிதிக்குழு மானியம் மூலமாக எம்ஜிஆர் தெருவில் புதிய சிமெண்ட் வடிகால்வாய் ரூ.7,00,000 லட்சம் மதிப்பிலான பூமி பூஜையை தண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் M.ஆனந்தன், துவக்கி வைத்தார், இந்த நிகழ்வின் போது ஒன்றிய கவுன்சிலர் சித்ரா தட்சிணாமூர்த்தி, துணை தலைவர் பரிமளா யுவராஜ், வார்டு உறுப்பினர் வெங்கடேசன், ஊராட்சி செயலர் கோபாலகிருஷ்ணன், மற்றும் வார்டு உறுப்பினர்கள் முன்னால் வார்டு உறுப்பினர் மற்றும் கிராம பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்,

## கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி மாணவிகளின் முயற்சியில் உருவாக்கப்பட்ட

# நாப்கில் ஸ்மார்ட்பின் என்ற சூரிய சக்தியில் இயங்கும் நாப்கின் எரிப்பு இயந்திரம்

## சித்தாபுதூரில் உள்ள கோவை மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு வழங்கப்பட்டது

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி மாணவிகளின் முயற்சியில் உருவாக்கப்பட்ட "நாப்கில் ஸ்மார்ட்பின்" என்ற சூரிய சக்தியில் இயங்கும் நாப்கின் எரிப்பு இயந்திரம், சித்தாபுதூரில் உள்ள கோவை மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு வழங்கப்பட்டது.

பெண்களின் மாதவிடாய்காலசுகாதாரத்திற்கு உதவும் வகையிலும், பயன்படுத்தப்பட்ட நாப்கின்களை பாதுகாப்பாகவும் முறையாகவும் அகற்றும் நோக்கத்திலும் இந்த இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. முழுமையாக சூரிய சக்தியில் இயங்குவதால் மின்சாரம் தேவையில்லை. மேலும், சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் கட்டுப்படுத்தவும் இது உதவுகிறது.




நிகழ்ச்சியில் கோவை மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு "நாப்கில் ஸ்மார்ட்பின்" இயந்திரத்தை பள்ளி பயன்பாட்டிற்காக அர்ப்பணித்தார்.

பின்னர் அவர் அனைவரது மத்தியிலும் கூறியதாவது.. பெண்களின் உடல்நலம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கழிவு மேலாண்மைக்கு உதவும் வகையில் மாணவிகள் உருவாக்கிய இந்தக் கண்டுபிடிப்பு மிகவும் பாராட்டுக்குரியது, சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் புதுமையான தொழில்நுட்பங்களை மாணவிகள் தொடர்ந்து உருவாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். சூரிய சக்தியில் முழுமையாக இயங்கும் இந்த ஸ்மார்ட்பின், மின்சாரமின்றி செயல்படுவதோடு, பயன்படுத்தப்பட்ட நாப்கின்களை சுகாதாரமான முறையில் எரித்து அகற்றி, சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார் இந்த நிகழ்ச்சியில் எஸ்.என். ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் தலைமை செயல் அலுவலர் சி.வி. ராம்குமார், தலைமை நிர்வாக அலுவலர் டி. மகேஷ்குமார் மற்றும் கோவை மாநகராட்சியின் முதன்மைக் கல்வி அலுவலர் ஆர். குணசேகரன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவிகளின் புதுமை முயற்சியைப் பாராட்டினர். கல்லூரி முதல்வர் முனைவர் கி.சித்ரா, எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் முனைவர் சுந்தர் ராமகிருஷ்ணன் ஆகியோரது வழிகாட்டுதலின் படி, நாம் வாழும் சமுதாயத்திற்குப் பயனுள்ள செயல்களைச் செய்ய வேண்டும் என்ற தொடர்ச்சியான ஊக்கமும், இத்தகைய கண்டுபிடிப்புகளை முன்னெடுக்க உந்துசக்தியாக அமைந்துள்ளதாக மாணவிகள் குறிப்பிட்டனர்.

# திருவூர் சூப்பர் கிங்ஸ் பயிற்சி பள்ளி மாணவ, மாணவிகள் 75 பேர் தென் இந்தியா மற்றும் மாநில அளவில் சாதனை

திருவள்ளூர் மாவட்டம் திருவூர் சூப்பர் கிங்ஸ் சிலம்பம் பயிற்சி பள்ளி ஆண்டு விழா திருவூர் சமுதாய கூடத்தில் நடைபெற்றது, தென் இந்திய அளவிலும் மாநில அளவிலும் 30 தங்கம் , 23 வெள்ளி , 22 வெண்கலம் என 75 பதக்கங்களை வென்று சாதனை படைத்த மாணவர்களுக்கு பாராட்டு விழா , 1 ஆம் ஆண்டு கச்சை பட்டயம் கட்டும் விழா மிக சிறப்பாக நடைப்பெற்றது முன்னதாக விழாவை ஓய்வு பெற்ற காவல் ஆய்வாளர் முனைவர் .க.சரவணன் தேசிய கொடியை ஏற்றி தொடங்கிவைத்தார் சூப்பர் கிங்ஸ் பயிற்சி பள்ளியின் கொடியை ஞா. பால்ராஜ் ஏற்றிவைத்து இனிப்புகள் வழங்கினார் , வரவேற்புரை திருவூர் சூப்பர் கிங்ஸ் சிலம்பம் பயிற்சி பள்ளி நிறவனர் சுந்தர் என்கிற துரைராஜ் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார், பயிற்சியாளர்கள் ராஜா, ஜெயா ஆகியோர் முன்னிலை வகித்தனர் , அனைவரையும் வரவேற்றார் சாதனை படைத்த மாணவ மாணவிகளுக்குசெவ்வாப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் எஸ்.விஜயகுமார், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் ஆகியோர் நினைவு பரிசு வழங்கினர் மேலும் கச்சை கட்டு பட்டயத்தை த.வெ.க ஒன்றிய செயலாளர் எஸ்.விஜயகுமார்,



முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஆர். பழனி, முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர் ஆர்.திலீப்ராஜ், வழக்கறிஞர்கள் க.எட்வின் , ஆர்.அன்பு,, முனுசாமி, சமூக ஆர்வலர்கள் சுபாஷ், தாமோதிரன், சா.அமுதன், சு.ரவி, ரா.உதயகுமார், ஜோதி, ஹரி, விஜய் ஆனந்த், அன்பு, சந்தானம், வெங்கடேசன், செந்தில்குமார், செல்வராஜ், மூர்த்தி, ஜெகநாதன், பிரான்சிஸ், வெற்றி, சாம்சன், குணா, ரவீந்திரன், செந்தில்,, தமிழ்குமார், உள்ளிட்டோர் அனைத்து பயிற்சி மாணவர்களுக்கும் சான்று கட்டுபட்டயத்தை வழங்கி சிறப்பித்தனர் இதில் மாணவர்கள் பெற்றோர்கள் என ஏராளமானோர் கல்ந்துக் கொண்டு சிறப்பித்தனர் முடிவில் துணைபயிற்சியாளர் து.லோகரட்சகி நன்றி கூறினார்.



ஈரோடு மாவட்டம், நசியனூர், நிலவருவாய் ஆய்வாளர் அலுவலக வளாகத்தில் உள்ள தானியங்கி மழையளவு பதிவு நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (07.07.2026) ஆய்வு மேற்கொண்டார்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே அச்சரப்பாக்கத்தில் அமைந்துள்ள தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் அவர்களின் 167 வது பிறந்த நாளை முன்னிட்டு அங்கு அமைந்துள்ள தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் அவர்களின் நினைவு மணி மண்டபத்தில் இன்று தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் அவர்களின் சிலைக்கு மனித வள மேம்பாடு துறை அமைச்சர் சரத்குமார் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் வீரப்பன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் தியாகராஜன்,விஜயராஜ் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் மாவட்ட செயலாளர்கள் எம் எஸ் பாலாஜி, மோகன் ராஜா உள்ளிட்ட தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கோழியாளத்தில் இரட்டைமலை சீனிவாசனின் 167ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

## வி.சி.க. சார்பில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள கோழியாளம் கிராமத்தில் தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் 167 வது பிறந்தநாள் விழா ஒன்றிய செயலாளர் தயாநிதி ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக மாவட்ட செயலாளர்கீழ்.கா.அன்புச்செல்வன், மண்டல செயலாளர் சூ.க. ஆதவன், மேனாள் துணை பொதுச் செயலாளர் சூ.க. விடுதலைச்செழியன், உத்திரமேரூர் தொகுதி மாவட்ட செயலாளர் ஏழிலரசு, செய்யூர் தொகுதி மாவட்ட செயலாளர்புகழேந்தி,மகளிர் அணி மாநில செயலாளர் காஞ்சி தமிழினி, இளைஞர் அணி மாநில செயலாளர் ராஜ்குமார், மாவட்ட பொருளாளர் பேரறிவாளன், மாவட்ட செய்தி தொடர்பாளர் கலைக்கதிரவன்,இளைஞர் அணி மாநில துணை செயலாளர் வெள்ளபுத்தூர் விஜயகுமார், தொகுதி துணை செயலாளர் வேலவன், மாவட்டத் துணைச் செயலாளர் எடிசன், ஆகியோர் கலந்து கொண்டு தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினர் இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர,பேரூர் செயலாளர்கள் பன்னீர்செல்வம், கதிர்வாணன், முகிலன், கிட்டு பிரபாகரன், மலை சமத்துவன், ஊராட்சி மன்றதலைவர்கள் அன்பழகன், ராஜேஷ், அச்சிறுப்பாக்கம் ஒன்றிய நிர்வாகிகள் செல்வம், முருகவேல், மதன், வெங்கடேசன், தலித்ராசன், ஏழுமலை, மகாதேவன், கன்னியப்பன், மணிகண்டன், அஜித்குமார், குமரேசன், தேசிங், கேது, முருகன், திலகவதி, கௌதம், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## ராணிப்பேட்டை மாவட்ட வளர்ச்சி திட்டப் பணிகள்:

## அனைத்துத்துறை அலுவலர்களுடன் அமைச்சர் வ. காந்திராஜ் ஆய்வுக் கூட்டம்



ராணிப்பேட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து,மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. வ. காந்திராஜ் அவர்கள் தலைமையில்அனைத்துதுறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம், இன்று (07.07.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்டத்தின் பல்வேறு துறைகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டங்களின் முன்னேற்றம், பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மற்றும் திட்டப்பணிகளைவிரைவாகவும் தரமாகவும் நிறைவேற்றுவது குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடிக்கவும், மக்கள் நலத் திட்டங்களை தாமதமின்றி செயல்படுத்தவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந. பிரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி தாஹிரா (இராணிப்பேட்டை), திரு. க. கபில் (சோளிங்கர்), திரு. எஸ். எம். சுகுமார் (ஆற்காடு), மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பெ. சிபின், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி சி. பேபி இந்திரா, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திருமதி ச. செல்வராணி, மாவட்ட வன அலுவலர் திரு. சிவகுமார், இ.வ.ப., உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில்

## இரட்டைமலை சீனிவாசனாருக்கு உருவசிலை அமைத்து

## 167வது பிறந்தநாள் விழாவை மாலை அணிவித்து மரியாதை



தமிழ்நாடு பறையர் பாதுகாப்பு பேரவை மற்றும் ஆதித்தமிழர் புரட்சி கழகம் சார்பில், திவான் பகதூர்தாத்தாஇரட்டைமலை சீனிவாசனார் 167-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி போல்டன்புரத்தில் இன்று நடைபெற்றது.

நிகழ்ச்சியில், தமிழக வெற்றி கழகத்தின் முதலமைச்சர் ச.ஜோசப் விஜயின் அறிவுறுத்தலின்படி, கழக பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஆனந்த் வழிகாட்டுதலின்படியும், சட்டமன்ற உறுப்பினரும் மீன்வளத்துறை அமைச்சருமான ஸ்ரீநாத் உத்தரவின்படியும் தூத்துக்குடி மத்திய மாவட்டச் செயலாளர் SDR சாமுவேல் ராஜ் ஆலோசனைபடியும் தூத்துக்குடி மாவட்டம் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் போல்டன்புரத்தில் இரட்டைமலைசீனிவாசனாரின் புகைப்படம் மட்டும் இருந்தது தற்போது அதை சிலையாக மாற்றி அமைத்துக் கொடுத்தனர் தமிழக வெற்றி கழகத்தினர். இன்று பிறந்தநாளை முன்னிட்டு இதை கொண்டாடும் வகையில் 44வது வார்டு கழகச் செயலாளர் விஜய் கண்ணன் தலைமையில் இரட்டைமலை சீனிவாசனாரின்உருவசிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதைசெலுத்தி புகழஞ்சலி செலுத்தினர்.

பின்னர் அவரது கொள்கைகளை பின்பற்றி சமூக முன்னேற்றத்திற்காக தொடர்ந்து பாடுபட உறுதிமொழி ஏற்றனர்.

இந்நிகழ்வில், தெற்கு பகுதி கழகச் செயலாளர் A.இசக்கிமுத்து, 50வது வார்டு வட்டக் கழகச் செயலாளர் P.ரமேஷ், மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் R.ராதாகிருஷ்ணன், மத்திய மேற்கு பகுதி இணைச் செயலாளர் S. சுந்தர், 54வது வார்டு வட்டக் கழகச் செயலாளர் வெங்கடேஷ், ஆகியோருடன் கழக நிர்வாகிகளான சேமா ஆறுமுகம், P.செல்வ ராஜ், சில்லு கார்த்தி, P. அபிஷேக், R.தெய்வேந்திரன் உள்ளிட்ட தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## எழுத்தாளர் கிருபாஷினி ஜெயக்குமாரின் மை ப்ரெஞ்ச் கிராமர் எனும் புத்தக வெளியீட்டு விழா கோவை காந்திபுரம் பகுதியில் நடைபெற்றது




கோவையைச் சேர்ந்த எழுத்தாளர் கிருபாஷினி ஜெயக்குமார். கிருபா ஸ்கூல் ஆ∴ப் லாங்குவேஜஸ் பயிற்சி மையத்தின் நிறுவனரான இவர், 20-க்கும் மேற்பட்ட மொழிகளில் புலமை கொண்டு மொழி பயிற்றுநராக உள்ளார். இவர் ஏற்கனவே மை இங்கிலீஷ் க்ராமர், தி அன் டோல்டு சீக்ரெட் ஆப் சக்ஸஸ், உள்ளிட்ட 3 புத்தகங்களை எழுதியுள்ளார்.

இதனிடையே, கிருபாஷினியின் நான்காவது புத்தகமான மை ப்ரெஞ்ச் கிராமர் எனும் புத்தக வெளியீட்டு விழா கோவை காந்திபுரம் பகுதியில் நடைபெற்றது.

மூத்த வழக்கறிஞர் மதிவாணன் கலந்து கொண்டு புத்தகத்தை வெளியிட, கிருபாஷினி ஜெயக்குமார் அதனை பெற்றுக்கொண்டார்இதனைத் தொடர்ந்து கிருபாஷினிசெய்தியாளர்களிடம் பேசுகையில், "நான் இதுவரை மொழி தொடர்பாகவும், ஊக்கமளிக்கும் புத்தகங்களையும் எழுதியுள்ளேன். ஐரோப்பிய, ஆசிய மொழிகள் உட்பட அனைத்து மொழிகளிலும் புத்தகங்களை மொழிபெயர்த்து வெளியிடுவதே எனது எதிர்கால லட்சியம். எங்களது பயிற்சி மையத்தின் மூலம் 20-க்கும் மேற்பட்ட மொழிகளை பொதுமக்களுக்கு நாங்கள் பயிற்றுவித்து வருகிறோம். ஒருவர் இரண்டு மொழிகளுக்கு மேல் கற்கும்போது அவரது மூளையின் செயல்திறன் அதிகரிக்கும். இதனை நாம் அன்றாட வாழ்விலும் பார்க்க முடியும். எந்த வயதினராக இருந்தாலும்பல்வேறுமொழிகளையும் கற்றுக்கொள்ளலாம். மொழிகளைக் கற்றுக்கொள்ள விரும்புவோர் கிருபா ஸ்கூல் ஆ∴ப் லாங்குவேஜஸ் பயிற்சி மையத்தை அணுகலாம்," என்று தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## IsraelLebanon to hold sixth round of US brokered direct talks in Italy midJuly



*Israeli and Lebanese ambassadors are due to hold direct talks in Rome this month, Italy's foreign ministry said Tuesday, after several rounds of discussions in Washington aimed at de-escalation.*

*"We welcome with pleasure the announcement that the next round of talks between Israel and Lebanon mediated by the US will take place in Rome," Foreign Minister Antonio Tajani said on X.*

*A ministry spokesman said the talks would take place at the ambassador level on July 15 and 16. This round of talks will be the sixth since spring between the two neighbours, which do not have diplomatic relations and are technically in a state of war. The two countries and the United States signed a framework agreement last month aimed at "lasting peace", five days after the entry into force of a fragile ceasefire in the fighting between the Israeli army and the pro-Iranian Hezbollah that has been going on since March 2. This framework agreement stipulates that the Lebanese army will restore its authority in the south of the country, subject to Hezbollah's disarmament, starting with "pilot zones" from which the Israeli army would withdraw. Hezbollah drew Lebanon into the regional war on March 2 by attacking Israel, claiming it was acting in retaliation for the death of Iran's supreme leader, killed in US-Israeli strikes on Iran on February 28.*

*Israel responded with a large-scale bombing campaign and a ground offensive, while repeatedly calling for the evacuation of entire areas of southern Lebanon.*



சென்னையைதலைமையிடமாககொண்டுசெயல்பட்டுவரும்அகிலஇந்தியவிஸ்வகர்மபேரவைதொழிற்சங்கத்தின் 166 கிளைகளுடன் செயல்பட்டு வரும் நிலையில் இந்த ஆண்டிற்கான 39 ஆவதுதேசிய பொதுக்குழு ஈரோட்டில் புஞ்சைபுளியம்பட்டி கே. ஜி தனியார்திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது இதில் இந்திய முழுவதும் இருந்து சிறப்பு அழைப்பாளர்கள்மற்றும்நிர்வாகிகள்உறுப்பினர்கள்கலந்து கொள்ளஉள்ளனர்என்றுதேசியதலைவர்ஏகுமார்ஆச்சாரியார் மற்றும் மாநில பொதுச் செயலாளர் எம்.மருத ராஜ கணேஷ் ஆகியோரது தலைமையில் நடைபெற உள்ளது என ஈரோடு மாவட்ட செயலாளர் மாநில அமைப்பு செயலாளருமான ஆர்.மூர்த்தி தெரிவித்துள்ளார்

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.